



**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**


**மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்கும் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2017 ஒகஸ்ட்**




**வினாத்தாள் - I** **45 நிமிடம்**

- **01, 02** ஆகிய வினாக்களின் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

**01.** 


(1)  (2)  (3) 


**02.** 


(1)  (2)  (3) 

- **03, 04** ஆகிய வினாக்களில் ஓர் உரு ஏனைய இரு உருக்களிலிருந்தும் வேறுபடுகின்றது. வேறுபடும் உருவைத் தெரிவு செய்க.


**03.**



(1)



(2)


(3)

**04.**


(1)


(2)


(3)

2017

- **05, 06** ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ளவற்றில் மூன்றை ஒரு கூட்டமாகவும் இரண்டை வேறொரு கூட்டமாகவும் வேறுபடுத்தலாம் அவ்விரு கூட்டங்களையும் **சேராதது** யாது?

**05.** ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே, ஜூன்,

(1) பெப்ரவரி (2) ஏப்ரல் (3) ஜூன்

**06.** லீற்றர், மீற்றர், கிலோமீற்றர், கிலோகிராம், கிராம், சென்ரீமீற்றர்

(1) மீற்றர் (2) லீற்றர் (3) கிராம்

- **07, 08** ஆகிய வினாக்களில் △ = 2, ▲ = 3, □ = 5, ■ = 6, ✱ = 8 என இட்டு வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

**07.**

□ △
\+ ▲ ■
..........

(1) △△ (2) ■■ (3) ✱✱


more Past papers
at www.Edukinniya.lk

**08.**

✱ ■ □
\- □ ▲ △
..........

(1) ▲▲▲ (2) ■■■ (3) △△△

09. பின்வரும் உருக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் ஒழுங்கில் அவ்வுருக்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.





(1) A B C
(2) A C B
(3) B C A

10. பின்வரும் அட்டவணையில் உள்ளவர்களில் வயது குறைந்தவரையும் வயது கூடியவரையும் முறையே தெரிவு செய்க.

| பெயர் | பிறந்த திகதி |
|---|---|
| மாதவி | 2006.06.13 |
| ரேவதி | 2007.10.02 |
| பாத்திமா | 2006.04.28 |
| சமந்தி | 2007.05.20 |

(1) பாத்திமா, ரேவதி
(2) சமந்தி, மாதவி
(3) ரேவதி, பாத்திமா

11. பின்வரும் உருக்களில் உள்ள எண் கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.




(1) 3
(2) 4
(3) 5

www.Edukinniya.lk


12. பின்வரும் கலந்துரையாடலை வாசிக்க.

A - பாடசாலைக்கு எப்படிப் போவது? நனைந்து போவேன்.
B - இன்றும் மழை பெய்யுமா? வானம் இருண்டிருக்கின்றது.
C - குடையை எடுத்துச் செல்ல மறக்க வேண்டாம்.
D - நேற்று பகல் முழுவதும் மழை பெய்தது. இன்றும் மழை பெய்யும் போல் தெரிகின்றது.

இந்தக் கலந்துரையாடல் மிகப் பொருத்தமான ஒழுங்கில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.

(1) A D C B (2) B D A C (3) C D B A

13. பின்வரும் உருவில் உள்ள எண் கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்துக்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.





(1) (2) (3)

14. 1 தொடக்கம் 25 வரையுள்ள எல்லா ஒற்றை எண்களையும் எழுதும் போது இலக்கம் 1 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?

(1) 7 (2) 8 (3) 13

15.




இவ்வுருவில் 3/5 பகுதியை நிழற்றுவதற்காக நிறந்தீட்டப்பட்டுள்ள கட்டங்களுக்கு மேலதிகமாக இன்னும் எத்தனை கட்டங்களை நிறந்தீட்ட வேண்டும்?

(1) 8 (2) 10 (3) 12

16. வாகன உரிமையாளர்கள் அனைவரும் செல்வந்தர்கள் அல்லர் எனின்,


(1) செல்வந்தர் ஒருபோதும் வாகன உரிமையாளர்கள் அல்லர்.
(2) வாகன உரிமையாளர்களாக இல்லாத எல்லோரும் செல்வந்தர்கள் ஆவர்.
(3) சில வாகன உரிமையாளர்கள் செல்வந்தர்கள் அல்லர்.

17. வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.
உரல் : உலக்கை எனின், வள்ளம் : ..................
(1) துடுப்பு (2) படகு (3) நீர்

18. 

பின்வரும் உருவில் கமலன் உட்பட 20 மாணவர்கள் வட்டமாக அமர்ந்திருக்கும் விதம் காட்டப்பட்டுள்ளது.
அவர்கள் எல்லோரும் கமலனிலிருந்து முறையே 1, 2, 3, 1, 2, 3, .... எனக் கூறியவாறு வட்டத்தைச் சுற்றி இரு தடவைகள் எண்ணுகின்றனர். இவ்வாறு முதற் சுற்றில் 1 எனக் கூறி எண்ணும் கமலன் இரண்டாம் சுற்றில் எண்ணும் போது கூறும் இலக்கம் யாது?
(1) 1 (2) 2 (3) 3


19. ஐந்து சம சதுரங்களை ஒரு நிரையில் வைத்துத் தயார் செய்யப்பட்ட பின்வரும் உருவில் உள்ள செவ்வகத்தின் சுற்றளவு 180 சென்ரிமீற்றர் ஆகும். இங்கு ஒரு சதுரத்தின் பரப்பளவு எத்தனை சதுர சென்ரிமீற்றர்?
(1) 225 (2) 256 (3) 400



20. 31 நாட்களைக் கொண்ட ஒரு மாதத்தில் செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை, வியாழக்கிழமை ஆகிய நாட்கள் ஐந்து வீதம் உள்ளன. அம்மாதத்தின் 24ஆம் திகதி என்ன நாளாகும்?
(1) புதன்கிழமை (2) வியாழக்கிழமை (3) வெள்ளிக்கிழமை


21. ஒரு மாம்பழத்தின் விலை ரூ. 25 ஆகும். ஓர் அப்பிள் பழத்தின் விலை ரூ. 40 ஆகும். மாம்பழம், அப்பிள் பழம் ஆகியவற்றின் ஒரு குறித்த எண்ணிக்கையை வாங்குவதற்குக் கீதா செலவிட்ட பணம் ரூ. 205 ஆகும். கீதா வாங்கிய மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?
(1) 2 (2) 4 (3) 5

22. காலை 6.45 இற்குக் கொழும்பிலிருந்து மாத்தறையை நோக்கி ஒரு மாறாத கதியில் நிறுத்தாமல் செலுத்தப்படும் ஒரு பேருந்தின் பயணம் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.





| அடைந்த நகரம் | நகரத்தில் உள்ள கிலோமீற்றர் தூண் | அடைந்த நேரம் |
|---|---|---|
| காலி | 120 km | காலை 10.45 |
| மாத்தறை | 165km | .................. |

இதற்கேற்ப பேருந்து மாத்தறை நகரத்தை பிற்பகல் எத்தனை மணிக்கு அடையும்?
(1) 12.15 (2) 12.30 (3) 12.45

23. 

இவ்வுருவில் ஆறு பக்கங்களும் A, B, C, D, E, F எனக் குறிக்கப்பட்டுள்ள ஒரு தாயக்கட்டையின் மூன்று நிலைகள் உள்ளன.
மேற்குறித்த தாயக்கட்டையில் D எனக் குறிக்கப்பட்டுள்ள பக்கத்திற்கு எதிரேயுள்ள பக்கத்தைக் காட்டும் எழுத்து யாது?
(1) A (2) B (3) F


24. 

A, B, C, D என்னும் நான்கு குழுக்களில் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கைகள், இவ்வுருவில் வகை குறிக்கப்பட்டுள்ளன.
குழு A இல் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை 48 ஆகும். இதற்கு ஏற்ப B, C ஆகிய இரு குழுக்களிலும் உள்ள பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது?
(1) 24 (2) 36 (3) 42

**25.** நான்கு இலக்கங்களைக் கொண்ட ஓர் எண் உள்ளது. அந்த எண்ணின்
- முதலாம் இலக்கம் நான்காம் இலக்கத்தின் ஐந்து மடங்காகும்.
- இரண்டாம் இலக்கம் மூன்றாம் இலக்கத்தின் நான்கு மடங்காகும்.

அவ்வெண் கீழே தரப்பட்டுள்ள எண்களால் யாதாக இருக்கலாம்?
(1) 5182 (2) 5281 (3) 5821


● மரங்களில் பூக்கும் பூக்கள், கொடிகளில் பூக்கும் பூக்கள், அலரிப் பூக்கள், பூக்கள் ஆகியவற்றுக்கிடையே உள்ள தொடர்பு பின்வரும் உருவில் வகைக் குறிக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டு 26, 27 ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.




**26.** அலரிப் பூவை வகைகுறிக்கும் எழுத்து யாது?
(1) P (2) R (3) S


**27.** Q இனால் வகைகுறிக்கப்படும் பூவின் வகையாகப் பின்வருவனவற்றில் எது இருக்கலாம்?
(1) படர் மல்லிகை (2) நந்தியாவட்டை (3) பவளமல்லிகை

**28.** ஒரு குறித்த நேரத்தில் ஒரு பாதை வழியே சென்ற வாகனங்கள் பற்றிய தகவல்கள் இவ்வரைபில் தரப்பட்டுள்ளன. அந்நேரத்தில் அப்பாதையில் சென்ற மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை பின்வரும் எவ்விரு வாகன வகைகளின் எண்ணிக்கைகளின் கூட்டுத்தொகைக்குச் சமம்?
(1) பேருந்துகளும் மோட்டார் வாகனங்களும்
(2) மோட்டார் வாகனங்களும் முச்சக்கர வண்டிகளும்
(3) முச்சக்கர வண்டிகளும் பேருந்துகளும்





**29.** ஒரு குறித்த நகரத்தில் விளையாட்டு மைதானத்திற்கு வடக்கே பாடசாலை உள்ளது. விளையாட்டு மைதானத்திற்குத் தெற்கே நூலகம் உள்ளது எனின்,
(1) நூலகத்திற்குத் தெற்கே பாடசாலை உள்ளது.
(2) பாடசாலைக்கும் விளையாட்டு மைதானத்திற்கும் இடையே நூலகம் உள்ளது.
(3) பாடசாலைக்குத் தெற்கே நூலகம் உள்ளது.

**30.**




இவ்வுருவில் காணப்படும் தராசின் A, B ஆகிய தட்டுக்களில் வைக்கப்பட்டுள்ள பொருட்களின் நிறைகள் ஒன்றுக்கொன்று சமம்.
இதற்கு ஏற்பப் பின்வரும் தராசின் இரு பக்கங்களினதும் நிறைகளைச் சமன் செய்வதற்குத் தட்டு B யில் வைக்கப்பட வேண்டிய பொருட்கள் யாவை?

more Past papers
at www.Edukinniya.lk




(1) ● ●
(2) ● ● ●
(3) ● ● ● ●

**31.** சில்லுகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் ஒழுங்கில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.
(1) கொள்கலன் வண்டி, மோட்டார் வாகனம், முச்சக்கர வண்டி, ஒற்றைச் சில்லு வண்டி
(2) ஒற்றைச் சில்லு வண்டி, முச்சக்கர வண்டி, கொள்கலன் வண்டி, மோட்டார் வாகனம்
(3) ஒற்றைச் சில்லு வண்டி, முச்சக்கர வண்டி, மோட்டார் வாகனம், கொள்கலன் வண்டி


**32.** $\Delta \times \square = 60$ ஆகவும் $\Delta - \square = 7$ ஆகவும் இருப்பின், $\Delta + \square$ இன் பெறுமானம் யாது?
(1) 15 (2) 16 (3) 17

33. இரு வெற்றுக் கட்டங்களுக்கும் பொருத்தமான இரு கணிதச் செய்கைகளையும் முறையே தெரிவு செய்க.


343 □ 7 = 7 □ 7

(1) +, ×　(2) ÷, ×　(3) ×, ÷


34. பின்வரும் உரு நிரையில் உள்ள கோலத்திற்கு ஏற்ப இரு வெற்றிடங்களிலும் இருக்க வேண்டிய உருச் சோடியைத் தெரிவு செய்க.




35. பின்வரும் இரு திண்மங்கள் தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுக்களில் சரியானதைத் தெரிவு செய்க.



(1) விளிம்புகளின் எண்ணிக்கை உச்சிகளின் எண்ணிக்கையிலும் குறைவானது.
(2) உச்சிகளின் எண்ணிக்கை முகங்களின் எண்ணிக்கையிலும் குறைவானது.
(3) முகங்களின் எண்ணிக்கை விளிம்புகளின் எண்ணிக்கையிலும் குறைவானது.

36. 

பின்வரும் உருவில் உள்ள கடிகாரத்தின் முகத்தை முகம் பார்க்கும் கண்ணாடியை நோக்கித் திருப்பி அக்கண்ணாடியினூடாகப் பார்க்கும் போது அக்கடிகார முகம் காணப்படத்தக்க விதத்தைத் தெரிவு செய்க.





37. சங்கரி முதல் நாளில் ஓர் உண்டியலில் ரூ. 10 ஐ இடுகின்றாள். அவள் அதன் பின்னர் ஒவ்வொரு நாளும் முந்திய நாளில் இட்ட பணத்திலும் பார்க்க ரூ. 10 வீதம் கூடுதலாக உண்டியலில் இடுகின்றாள். இவ்வாறாக உண்டியலில் சேரும் மொத்தப் பணம் எத்தனையாம் நாளில் முதன் முதலாக ரூ. 500 இலும் கூடுதலாக இருக்கும்?

(1) 8　(2) 9　(3) 10

38. கீழே தரப்பட்டுள்ள இரு உருக்களுக்கும் ஏற்ப Ⓐ அளவு உள்ள ஓர் அட்டைத்தாளிலிருந்து Ⓑ அளவுள்ள எத்தனை வட்டங்களை உயர்ந்தபட்சம் வெட்டலாம்?


(1) 20
(2) 24
(3) 30




www.Edukinniya.lk

39. ஒரு பாத்திரத்தில் 1.5 லீற்றர் நீர் உள்ளது. அப்பாத்திரத்தில் உள்ள ஒரு சிறிய துவாரத்திலிருந்து ஒவ்வொரு நிமிடமும் 50 மில்லிலீற்றர் நீர் கசிந்து வெளியேறுகின்றது. அதற்கு ஏற்ப அப்பாத்திரம் முற்றாக வெறுமையாவதற்கு எடுக்கும் நேரம் எத்தனை நிமிடம்?

(1) 20　(2) 30　(3) 40

40. 

இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 10　(2) 11　(3) 12

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்கும் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2017 ஓகஸ்ட்

வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

01. பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்க.

நாம் எப்பொழுதும் சுத்தமாக இருப்பதோடு எமது வீட்டையும் சுற்றாடலையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். குப்பைகளைக் கண்ட இடங்களில் வீசாமல் ஒரு கூடையில் இட்டு அல்லது கிடங்கு ஒன்றில் புதைத்து குப்பை கூளங்களற்ற சுற்றாடல் ஒன்றினை எம்மால் அமைக்க முடியும். கூடைகளில் இட்டு வைக்கின்ற குப்பைகளை உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள் சேகரிக்க வரும் போது அவர்களிடம் கையளிக்க வேண்டும். இதன் மூலம் பல கொடிய நோய்களிலிருந்து நாம் எம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம். எமது நாட்டைப் பொறுத்த வரையில் சுத்தம் பேணுதல் ஓர் இன்றியமையாத தேவையாக அமைந்துள்ளது.

கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து, புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

(i) இப்பந்தியில் எதனைப் பேணுவதன் முக்கியத்துவம் பற்றிக் கூறப்படுகின்றது?
: ........................................................................................................................

(ii) குப்பை கூளங்களற்ற சுற்றாடல் ஒன்றினை அமைத்துக் கொள்ளக்கூடிய ஒரு முறையைக் குறிப்பிடுக.
: ........................................................................................................................

(iii) குழி என்பதன் ஒத்த கருத்துச் சொல்லினைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து எழுதுக.
: ........................................................................................................................

(iv) நாங்கள் என்பதன் படர்க்கைச் சொல்லைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து எழுதுக.
: ........................................................................................................................

(v) 'உள்ளூராட்சி' என்பதைப் பிரித்து எழுதுக.
: ........................................................................................................................

more Past papers
at www.Edukinniya.lk

(vi) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இணைமொழியை எழுதுக.
: ........................................................................................................................

2017

02. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) அஜந்தா ஓவியங்கள் ............................ (பழமை / பழைமை) வாய்ந்தன.

(ii) இராமன் தனது ............................ (பாதுகைகளை / பாதுக்கைகளை) பரதனிடம் கொடுத்தான்.

03. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் / பயனிலைத் தொடர்புகள் சரியாக எழுதப்பட்டிருப்பின் (✓) எனவும் பிழையாக எழுதப்பட்டிருப்பின் (×) எனவும் வாக்கியத்திற்கு எதிரே உள்ள அடைப்புக்குள் இடுக.

(i) நாம் அனைவரும் பேருந்தில் கதிர்காமத்துக்குப் போனோம். (.........)

(ii) தேனீக்கள் ஒவ்வொரு பூவிலும் தேனை உறிஞ்சிக் குடித்தது. (.........)

(iii) சில விலங்குகளின் பண்புகள் மனிதருக்கு வழிகாட்டியாக அமைகின்றன. (.........)

(iv) எமக்குக் கல்வியும் ஒழுக்கமும் இரு கண்களைப் போன்றது. (.........)

04. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்திலும் தடித்த எழுத்துக்களில் உள்ள சொற்றொடருக்குப் பொருத்தமான கருத்தை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) தாயின் சொற்கேட்டு நடப்பதாகச் சத்தியம் செய்த பின்னர் **நாக்குபுரளுதல்** கூடாது.
(பொய் பேசுதல் / கொடுத்த வாக்கை மீறுதல்)

(ii) பாடசாலை விளையாட்டுப் போட்டியில் மாணவர்களின் சாதனைகளைக் கண்ணுற்ற அதிபர் **முகம்மலர்ந்தார்**. (உற்சாகமடைந்தார் / மகிழ்ச்சியடைந்தார்)

05. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

(i) நூலுக்கு இன்னொருவரால் வழங்கப்படும் உரை ...................... (முகவுரை / அணிந்துரை)

(ii) "மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையவன்"
என்னும் கவிதையில் ............................... (மன்னன் / கற்றோன்) ஒப்பீட்டளவில் சிறப்பு வாய்ந்தவன் எனக் கூறப்படுகின்றது.

06. கீழே தரப்பட்டுள்ள கவிதையில் உள்ள **வெற்றிடத்தைப் பூரணப்படுத்துக.**

அருமை உடலின் நலமெல்லாம்
அடையும் வழிகள் அறிவாயே
...................................................
வையம் புகழ வாழ்வாயே

07. கீழே தரப்பட்டுள்ள பெண்பால் சொல்லுக்குப் பொருத்தமான ஆண்பால் சொல்லைப் **புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

பாங்கி : ...............................

08. கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தில் **பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறிகளை** இடுக.

தம்பி நீ பாடசாலைக்குச் செல்கிறாயா

09. கீழே தரப்பட்டுள்ள கவிதையை வாசித்து, கேட்கப்பட்டுள்ள வினாவுக்குரிய விடையைப் **புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

எண்ணிய முடிதல் வேண்டும்,
நல்லவே எண்ணல் வேண்டும்;
திண்ணிய நெஞ்சம் வேண்டும்;
தெளிந்த நல்லறிவு வேண்டும்;

'மனதில் உறுதி வேண்டும்' என்பதை நன்கு வெளிப்படுத்தும் வரியை இக்கவிதையிலிருந்து தெரிந்தெடுத்து எழுதுக. ..............................................................................................

..............................................................................................

10. பின்வரும் பழமொழியைப் **பூர்த்தி செய்க.**

போதும் என்ற மனமே : ..................................................

11. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு தமிழ்ச் சொல்லிற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை **ஆங்கிலத்தில் எழுதுக.**

(i) நாளை : ............................................ (ii) வானவில் : ............................................

12. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு ஆங்கில வாக்கியத்திலும் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைப் பெட்டியில் தரப்பட்டுள்ள சொற்களிலிருந்து தெரிவு செய்து **வெற்றிடத்தை நிரப்புக.**

| |
|---|
| bakery<br>hospital<br>market<br>post office |

(i) We buy stamps from the ....................................

(ii) We buy vegetables from the ....................................

13. பின்வரும் வாக்கியத்தை ஆங்கிலத்தில் சொல்லும் விதத்தில் **ஆங்கில எழுத்துக்களில்** எழுதுக.

எனக்குப் பசிக்கிறது : ..................................................

14. பின்வரும் **சிங்களச் சொல்லின் கருத்தைத் தமிழில்** எழுதுக.

ஆ(ப்)பன சாலாவ : ..................................................

15. பின்வரும் வாக்கியம் **சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழில்** எழுதுக.

நான் பாடம் படிக்கிறேன் : ..................................................

www.Edukinniya.lk

16. கிழக்கு வானில் உதிக்கின்ற சூரியனின் இளம் வெப்பக்கதிர்களால் முழு உலகமும் ஒளியூட்டப்படுகின்ற வேளையில் உலகிற்கு இன்னுமொரு புதிய தினம் பிறக்கும். பிறக்கின்ற அந்த அழகிய காலைப்பொழுது எமது உடலையும் உள்ளத்தையும் புத்துணர்ச்சி பெறச் செய்வதோடு சூழவுள்ள சுற்றாடலுக்குப் புதிய அழகினை ஊட்டும். "காலைப்பொழுதின் அழகு" என்னும் தலைப்பில் மூன்று வாக்கியங்களை எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்)

- ........................................................................................................
........................................................................................................
- ........................................................................................................
........................................................................................................
- ........................................................................................................
........................................................................................................

- **தரப்பட்டுள்ள புள்ளிக்கோடுகளில் விடைகளை எழுதுக.**


17. "முப்பத்தைந்தாயிரத்துத் தொண்ணூற்று ஒப்பது" என்னும் எண்ணுடன் ஒன்றைக் கூட்டும் போது கிடைக்கும் எண்ணை இலக்கங்களில் எழுதுக. : ........................................................................

18. இப்பெட்டியினுள் உள்ள எண்களுள் 9 இனால் மீதியின்றி வகுபடக்கூடிய எண் எது?
: ........................................................................


| | |
|---|---|
| 399 | |
| | 578 |
| 451 | 675 |

19. சுதன் 5 ஈர்க்குத் துண்டுகளைப் பயன்படுத்தி உரோம எண்குறிகளில் எண் 8 இனை வகைகுறித்துக் காட்டினான். அதற்கேற்ப 20 இலும் குறைந்த ஓர் எண்ணை உரோம எண் குறிகளில் வகைகுறிப்பதற்குச் சுதனுக்கு 7 ஈர்க்குத் துண்டுகள் தேவைப்பட்டன. அவ்வெண்ணை உரோம எண்குறிகளில் எழுதுக. : ........................................................................

20. ஒவ்வொன்றும் 1 சதுர சென்ரிமீற்றர் பரப்பளவைக் கொண்ட 10 சதுரங்களினால் ஆன உரு இங்கு காட்டப்பட்டுள்ளது.
இவ்வுருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியில் பரப்பளவு மொத்தப் பரப்பளவில் என்ன பின்னமாகும்? : ........................................................................




21. கீழே காட்டப்பட்டுள்ள வடிவங்களைப் பயன்படுத்தி ஆக்கத்தக்க திண்மங்கள் இரண்டும் யாவை?



(i) ........................................................................
(ii) ........................................................................

22. (i) இவ்வுருவில் நிழற்றப்பட்ட பகுதியை ஒரு தசம எண்ணாக எழுதுக.
: ........................................................................

(ii) 3/5 , 1/2 , 0.3, 7/10 இவ்வெண்களில் **மிகவும் சிறிய** எண் யாது?
: ........................................................................




23. பிற்பகல் 1.15 இற்குத் தனது வீட்டிலிருந்து புறப்பட்ட பாலா பிற்பகல் 2.40 இற்கு நூலகத்தைச் சென்றடைந்தான்.

(i) வீட்டிலிருந்து நூலகத்திற்குச் செல்வதற்குப் பாலாவுக்கு எடுத்த நேரம் மணித்தியாலங்களிலும் நிமிடங்களிலும் எவ்வளவு?
மணித்தியாலம் ........................................ நிமிடம் ........................................

(ii) பாலா நூலகத்தை அடைந்த நேரத்தை இருபத்துநான்கு மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டும் விதத்தில் இலக்கங்களில் எழுதுக. ........................................

24.




இவ்வுருவில் காட்டப்பட்டுள்ள கம்பிச் சட்டத்தில்
(i) a, b, c, d எனப் பெயரிடப்பட்டுள்ள நான்கு கம்பிகளினதும் மொத்த நீளம் சென்ரிமீற்றரில் எவ்வளவு?
........................................................................
(ii) கம்பிச் சட்டத்தின் சுற்றளவு சென்ரிமீற்றரில் எவ்வளவு?
........................................................................

2017

25. பாத்திரம் ஒன்று கொள்ளும் தேனின் கனவளவு 3 லீற்றர் ஆகும். அப்பாத்திரத்தில் 1 லீற்றர் 500 மில்லிலீற்றர் அளவு தேன் இடப்பட்டுள்ளது.

(i) இப்பாத்திரத்தை நிரப்புவதற்கு இன்னும் தேவைப்படும் தேனின் அளவு லீற்றர், மில்லிலீற்றர் ஆகியவற்றில் எவ்வளவு?

லீற்றர் ...................... மில்லிலீற்றர் ...............................

(ii) பாத்திரத்தில் தற்போது உள்ள தேனை ஒவ்வொன்றும் 150 மில்லிலீற்றர் கொள்ளளவுடைய எத்தனை போத்தல்களில் நிரப்பலாம்?

.......................................................................

26. குறித்தவொரு கடையில் 1 கிலோகிராம் 750 கிராம் சீனியை வாங்குவதற்கு, நிலானி ரூ. 210 பணத்தைச் செலுத்தினாள். அப்பணத்தைச் செலுத்துவதற்கு ரூ. 500 காசுத் தாளைக் கொடுத்த நிலானிக்கு மீதிப் பணமாக ஒரே வகையான 5 காசுத் தாள்களும் ஒரே வகையான 4 நாணயங்களும் கிடைத்தன.


(i) இக்கடையில் 1 கிலோகிராம் சீனியின் விலை எத்தனை ரூபா ? ...............................

(ii) நிலானிக்கு மீதிப் பணமாகக் கிடைத்த

(அ) ஐந்து காசுத் தாள்களினதும் மொத்தப் பெறுமதி ரூபாய்களில் எவ்வளவு? ...............................

(ஆ) நான்கு நாணயங்களினதும் மொத்தப் பெறுமதி ரூபாய்களில் எவ்வளவு? ...............................

27.





இந்த எண்சட்டத்தில்

(i) வகைகுறிக்கப்படும் எண்ணை இலக்கங்களில் எழுதுக. ...............................

(ii) கோல் C இல் உள்ள மணிகளினால் வகை குறிக்கப்படும் பெறுமானம் யாது? ...............................

.......................................................................

28. குமுதா குறித்தவொரு இடத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்து 100 மீற்றர் கிழக்கு நோக்கிச் சென்றாள். அதன் பின்னர் அவள் அவ்விடத்திலிருந்து உருவில் காட்டப்பட்டுள்ளவாறு வலது கைப்பக்கமாகத் திரும்பி இன்னும் 100 மீற்றர் சென்றாள்.




www.Edukinniya.lk

(i) குமுதா ஆரம்ப இடத்திலிருந்து தற்போது எத்திசையில் இருக்கின்றாள்? ...............................

(ii) அவள் மீண்டும் ஆரம்ப இடத்தைச் சென்றடைவதற்கு இன்னும் எத்தனை தடவைகள் வலது கைப்பக்கமாகத் திரும்பி 100 மீற்றர் வீதம் முன்னோக்கிச் செல்ல வேண்டும்?


.......................................................................

29. 120 பழங்களைக் கொண்ட மாம்பழக் குவியலில் 3/8 பழுதடைந்ததன் காரணமாக அகற்றப்பட்டது. மீதியாக இருந்த நல்ல மாம்பழங்கள் பாமினி, சாலினி, பாத்திமா ஆகிய மூன்று நண்பிகளிடையே சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

(i) குவியலில் இருந்த நல்ல மாம்பழங்களின் எண்ணிக்கை எவ்வளவு? ...............................

(ii) ஒரு நண்பிக்குக் கிடைத்த மாம்பழங்களின் எண்ணிக்கை எவ்வளவு? ...............................

30. A, B, C, D, E எனப் பெயரிடப்பட்டுள்ள ஐந்து வடிவங்கள் கீழே தரப்பட்டுள்ள உருவில் காட்டப்பட்டுள்ளன.




இவ்வடிவங்களில்

(i) குறைந்த எண்ணிக்கையான சமச்சீர்க் கோடுகள் வரையப்படத்தக்க வடிவத்துக்குரிய ஆங்கில எழுத்து யாது? ...............................

(ii) அதிக எண்ணிக்கையான சமச்சீர்க் கோடுகள் வரையப்படத்தக்க வடிவத்துக்குரிய ஆங்கில எழுத்து யாது? ...............................

- 31 தொடக்கம் 60 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.

31. உலர்த்திய பூக்களை அவிப்பதால் ஓர் ஔடதப் பானம் தயாரிக்கப்படத்தக்க தாவரம்
(1) ஆவரசு (2) கோப்பி (3) கொத்தமல்லி (4) தேயிலை

32. வயல் வேலைகளின் போது பயன்படுத்தப்படுகின்ற உபகரணங்கள் மாத்திரம் அடங்கும் விடையைத் தெரிவு செய்க.
(1) மண்வெட்டி, வளைசில்லு, நுகத்தடி (2) நுகத்தடி, அரிவாள், கலப்பை
(3) கலப்பை, செக்கு, முட்கலப்பை (4) கைவலை, மண்வெட்டி, அரிவாள்

33. இலங்கையில் கடற்கரை இருக்கும் ஒரு மாகாணம்
(1) சப்பிரகமுவ மாகாணம் (2) மத்திய மாகாணம்
(3) ஊவா மாகாணம் (4) வடமேல் மாகாணம்

34. மின்காந்தம் பயன்படுத்தப்படும் ஒரு நிர்மாணிப்பு
(1) நீராவிப் படகு (2) காற்றுத் திசைகாட்டி (3) மின்மணி (4) ஊசித்துளைக் கமரா

35. நீருக்கு இருக்கக்கூடிய ஓர் இயல்பாக அமையாதது
(1) நிலையான வடிவம் இருத்தல் (2) வெப்பமாக்கும் போது நீராவி வெளியேறுதல்
(3) கொண்டிஸ் தூளினால் நிறமூட்டப்படல் (4) குளிர்த்தும் போது பனிக்கட்டியாக மாறுதல்

36. பச்சையாக வெட்டிய எம்மரக்கறித் துண்டுகள் சிலவற்றைப் பாத்திரத்தில் உள்ள நீரில் இடும் போது அந்நீர் நிறம் பெறும்?
(1) கத்தரிக்காய் (2) பூசணிக்காய் (3) கரட் (4) பீற்றூட்

37. வானில் மிக உயரத்தில் பறக்கின்ற கூர்மையான கண்களையுடைய ஊனுண்ணும் பறவை
(1) செண்பகம் (2) கழுகு (3) ஆந்தை (4) மழைக்குருவி

38. காற்றின் மூலம் மண்ணரிப்பு அதிக அளவில் நடைபெறும் பிரதேசம்
(1) உயர்ந்த மரங்களைக் கொண்ட வனப் பிரதேசம்
(2) அதிக அளவு கட்டடங்களைக் கொண்ட நகர்ப் பிரதேசம்
(3) புற்களற்ற மணற்பாங்கான பிரதேசம்
(4) தேயிலைச் செடிகளைக் கொண்ட மலைப் பிரதேசம்

more Past papers
at www.Edukinniya.lk

39. பின்வரும் உடுக்கோலங்களில் மிகவும் கூடிய எண்ணிக்கையான உடுக்கள் அடங்கும் உடுக் கோலம் யாது?
(1) வேட்டைக்காரன் (2) பெருங்கரடி (3) தென்சிலுவை (4) விருச்சிகம்

40. "புறப்படுவோமே மச்சான் புறப்படுவோமே - கட்டுவலை எடுத்துக்கிட்டுப் புறப்படுவோமே" என்னும் பாடல்
(1) அரிவிவெட்டுப் பாடல் (2) வண்டிப் பாடல் (3) கும்மிப் பாடல் (4) மீனவர் பாடல்

41. நுரைச்சோலை மின்சார நிலையத்தின் படம் அச்சிடப்பட்டுள்ள இலங்கைக் காசுத் தாள்
(1) ரூபா 20 (2) ரூபா 50 (3) ரூபா 100 (4) ரூபா 500

42. இலங்கைக்கு மிகவும் அண்மையில் அமைந்துள்ள நாடுகள் மாத்திரம் அடங்கும் விடையைத் தெரிவு செய்க
(1) மாலைதீவுகள், நேபாளம், பூட்டான் (2) பாகிஸ்தான், ஜப்பான், பங்களாதேஷ்
(3) இந்தியா, ரஷ்யா, நேபாளம் (4) பங்களாதேஷ், சீனா, மாலைதீவுகள்

43. செயற்கை நிறப்பொருள்கள், சுவையூட்டிகள் ஆகியன சேர்க்கப்பட்ட உணவுகளை உட்கொள்வதால் ஏற்படக் கூடிய நோய்
(1) நீர்வெறுப்பு நோய் (2) புற்றுநோய் (3) நெருப்புக் காய்ச்சல் (4) நீரிழிவு

44. டெங்கு நோயிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்குப் பின்பற்றக்கூடிய நடைமுறையொன்று.
(1) கொதித்தாறிய நீரைப் பருகுதல் (2) சமைத்த உணவுகளை நன்கு மூடி வைத்தல்
(3) சூழவுள்ள சுற்றாடலைச் சுத்தப்படுத்தல் (4) மரக்கறிகளைக் கூடுதலாக உட்கொள்ளல்

45. எமது நாட்டின் பொதுப் போக்குவரத்துப் பேருந்தில் மதகுருமார் தவிர பயணிகள் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ள வேறு இரு தரப்பினர் யாவர்?
(1) குழந்தைகள், நோயாளிகள் (2) நோயாளர்கள், பாடசாலை மாணவர்கள்
(3) வலது குறைந்தோர், கர்ப்பிணித் தாய்மார் (4) முதியோர், வலது குறைந்தோர்

46. நாற்றுமேடைகளிலிருந்து நாற்றுக்கள் பெறப்பட்டுப் பாத்திகளில் நடப்படுகின்ற பயிர்வகைகளை மாத்திரம் கொண்ட விடையைத் தெரிவு செய்க.
(1) போஞ்சி, வெண்டி, பசளி (2) போஞ்சி, தக்காளி, கறிமிளகாய்
(3) கத்திரி, பசளி, தக்காளி (4) கறிமிளகாய், கத்தரி, தக்காளி

47. வீதி நிறச் சமிக்ஞைக் கம்பத்தில் மேலிருந்து கீழாக நிறச் சமிக்ஞை அமைந்துள்ள சரியான ஒழுங்கு முறையைத் தெரிவு செய்க.
(1) சிவப்பு, மஞ்சள், பச்சை
(2) பச்சை, மஞ்சள், சிவப்பு
(3) மஞ்சள், சிவப்பு, பச்சை
(4) மஞ்சள், பச்சை, சிவப்பு

48. 'உலைத்துருத்தியைப்' பயன்படுத்துபவர்
(1) தச்சர் (2) மீனவர் (3) மேசன்மார் (4) கொல்லர்

49. காற்றின் மூலம் தொழிற்படும் சங்கீத உபகரணம்
(1) கடம் (2) கொம்பு வாத்தியம் (3) தவில் (4) உடுக்கு

50. இலங்கையில் அனைத்து அரச பாடசாலை மாணவர்களுக்கும் அரசாங்கத்தினால் இலவசமாக வழங்கப்படுவன.
(1) சீருடை, பகல் உணவு
(2) பகல் உணவு, பாடநூல்கள்
(3) பாடநூல்கள், சீருடை
(4) புலமைப்பரிசில், பகல் உணவு

51. வெடித்தல் மூலம் பரம்பலடையும் வித்துக்களைக் கொண்ட தாவரம்
(1) சோளம் (2) எண்ணெய் (3) கமுகு (4) குன்றிமணி

52. மைதானத்தின் நடுவில் பொருத்தப்படும் வலையின் இருபக்கங்களிலும் இருந்து விளையாடப்படும் இரு விளையாட்டுகள்
(1) வலைப்பந்து, பட்மின்டன்
(2) வொலிபோல், பட்மின்டன்
(3) வலைப்பந்து, கூடைப்பந்து
(4) வொலிபோல், வலைப்பந்து

53. கிறுக்கல் கவிதைகள், சுவரோவியங்கள் ஆகியன காணப்படும் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இடம்
(1) சீகிரியா (2) யாப்பகூவா (3) இசுறுமுனி (4) எம்பக்க

54. வீட்டினுள்ளே இயற்கையான குளிர்காற்றைப் பெற்றுக் கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் முறையாக அமையாதது.
(1) வீடுகளில் யன்னல்களைப் பொருத்துதல்.
(2) மின்விசிறிகளைப் பயன்படுத்தல்.
(3) சுவர்களின் மேலே காற்றுவெளிகளை இடுதல்.
(4) கதவு நிலையின் மேலே இடைவெளியை விடுதல்.

55. பயிர்களுக்குச் சேதம் விளைவிக்கும் விலங்குகள் மாத்திரம் அடங்கும் விடையைத் தெரிவுசெய்க.
(1) முசிறு, எறும்பு, தேனீ
(2) கரப்பான், வீட்டு ஈ, மூட்டைப் பூச்சி
(3) தண்டுகோதி, ஏபிட்டு, வெண்மூட்டைப் பூச்சி
(4) மூட்டைப் பூச்சி, பேன், உண்ணி

56. பின்வரும் உணவுப் பொருள்களுள் உற்பத்தித் திகதிக்கும் காலாவதியாகும் திகதிக்குமிடையே குறைந்த காலத்தைக் கொண்டது எது?
(1) ரின்மீன் (2) யோகட் (3) ஜாம் (4) பாற்கட்டி

57. வெளிநாட்டில் வசிக்கும் உமது பேனா நண்பன் தலதா பெரஹறாப் படம் ஒன்றை இயன்ற வரை துரிதமாக அனுப்புமாறு உங்களிடம் கேட்டுக் கொண்டுள்ளான். இதற்காக நீங்கள் பயன்படுத்தக் கூடிய மிகவும் பொருத்தமான முறை பின்வருவனவற்றுள் எது?
(1) விமானத் தபால் (2) கடற் தபால் (3) கடுகதித் தபால் (4) மின்னஞ்சல்

58. இலங்கையின் தேசிய பறவையாகக் காட்டுக்கோழியைத் தெரிவு செய்தமைக்கான பிரதான காரணம் அது
(1) எமது நாட்டில் அதிகமாகக் காணப்படுகின்றமை
(2) இந்நாட்டிற்கே உரித்தானதாக இருக்கின்றமை
(3) எல்லாப் பிரதேசங்களிலும் காணப்படக்கூடியதாக உள்ளமை
(4) மிக்க பயனுடையதாக இருக்கின்றமை

www.Edukinniya.lk

59. கடந்த காலங்களில் எமது நாட்டை ஆட்சி செய்த வெளிநாட்டவர்களை ஒழுங்குமுறையாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.
(1) போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்
(2) ஒல்லாந்தர், போர்த்துக்கேயர், ஆங்கிலேயர்
(3) ஆங்கிலேயர், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர்
(4) போர்த்துக்கேயர், ஆங்கிலேயர், ஒல்லாந்தர்

60. "கடமைகளை நிறைவேற்றுவதற்காகவும் சிறிய பொறுப்புகளை ஏற்றுக் கொள்வதற்காகவும் எனது மனதில் தோன்றிய ஆர்வம் எனது வீட்டிலுள்ள அனைவரது மனங்களிலும் தோன்றட்டும்!" இந்த எண்ணம் மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டில் எந்தப் படிமுறைக்கு உரியது?
(1) மனதைத் தளர்த்துதல் (2) மனவுறுதி (3) பிரார்த்தனை (4) மலர்வு